RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 345 | டிசம்பர்.15 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## புதிய கட்சி தொடங்கினார் ஓபிஎஸ்

சென்னை.டிச.15-

அதிமுகவில் பிரிந்தவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்று குரல் கொடுத்து வரும் ஓபிஎஸ் புதிய கட்சியை தொடங்கி உள்ளார். தான் நடத்தி வந்த அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவை கழகமாக மாற்றி இருக்கிறார்.

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட ஓபிஎஸ் தனி அணியாக செயல்பட்டு வருகிறார். பிரிந்தவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்று கூறி வரும் அவர், அதற்காக அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு என்ற பெயரில் ஒரு அமைப்பை துவங்கி செயல்பட்டு வந்தார்.

எப்படியும் அதிமுகவில் தம்மை இணைத்துக் கொண்டு விடுவது என்ற முனைப்பில் இருந்த ஓபிஎஸ், அதில் எவ்வித முன்னேற்றத்தையும் அடையாத நிலையில் இருந்தார். தொடர்ந்து கடும் அதிருப்தியில் இருந்த அவர், டிச.15ல் நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்து புதிய அறிவிப்பை வெளியிடுவதாக அறிவித்து இருந்தார்.

பின்னர் அந்த கூட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைப்பதாக அறிவித்து, டிச.24ல் எம்ஜிஆர் நினைவு தினத்தில் தமது அடுத்தக்கட்ட அரசியல் நகர்வை அறிவிப்பதாக தெரிவித்து இருந்தார்.

இந் நிலையில், திடீர் திருப்பமாக, புதிய கட்சியை ஓபிஎஸ் தொடங்கி உள்ளார். தான் நடத்தி வந்த




அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு என்ற அமைப்பை, அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகம் என்ற பெயரில் கட்சியாக மாற்றி இருக்கிறார்.

ஆனால் தமது அமைப்பை கட்சியாக மாற்றி உள்ளதாக அவர் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை. மாறாக அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகம் என்ற பெயரில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளார். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் ஊழியர்களை திமுக அரசு பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி அவர் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்.

இதுநாள் வரையில், அமைப்பின் பெயரில் அறிக்கை வெளியிட்டு வந்த அவர், முதல் முறையாக அமைப்பை கழகமாக மாற்றி அறிக்கையாக வெளியிட்டு இருக்கிறார். இந்த அறிக்கையில் கட்சி தலைவர், பொதுச் செயலாளர் யார் என்பன உள்ளிட்ட எந்த விவரங்களும் இல்லை.

எப்போதும் போல கழக ஒருங்கிணைப்பாளர், முன்னாள் முதல்வர் என்று தமது பொறுப்புகளை குறிப்பிட்டு கையெழுத்தை மட்டும் ஓபிஎஸ் இட்டுள்ளார். தமது கட்சியை அவர் முறைப்படி தேர்தல் கமிஷனில் பதிவு செய்துவிட்டாரா என்பது குறித்தும் எவ்வித தகவல்களும் இல்லை.

இதற்கு முன்னர் கடந்த 14ம் தேதி தான் நடத்தி வரும் அமைப்பின் பெயரில் கடைசியாக ஓபிஎஸ் அறிக்கை வெளியிட்டு இருந்தார். அதில் தலைமைக் கழகம், 154, பசுமை வழிச்சாலை, ராஜா அண் ணா மலைபுரம்,சென்னை600028 என்ற முகவரி இடம்பெற்று இருந்தது.

தற்போது அமைப்பை கழகமாக மாற்றி அவர் வெளியிட்டு உள்ள அறிக்கையில் முகவரி மாறி இருக்கிறது. இதில் தலைமைக்கழகம், 38/31, 38/2, சேமியர்ஸ் ரோடு, நந்தனம், சென்னை 600035 என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

ஆனால், இரண்டு அறிக்கையிலும் 93423 14327 என்ற செல்போன் எண் மட்டும் மாறாமல் இடம்பெற்றுள்ளது.

## அமித் ஷா முதல் விஜய் வரை: தி.மலையில் உதயநிதி 'அட்டாக்' பேச்சு

திருவண்ணாமலை: டிச.15-

"பிஹாரில் வென்றுவிட்டோம் அடுத்த இலக்கு தமிழ்நாடு என்கிறார் அமித் ஷா. இதுபோன்ற எந்த மிரட்டலையும் எதிர்கொள்ள கருப்பு சிவப்பு படை தயாராக உள்ளது" என தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

திருவண்ணாமலையில் இன்று வடக்கு மண்டல திமுக இளைஞரணி நிர்வாகிகள் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு திமுக இளைஞரணி தலைவரும், தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்குகிறார். திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் சிறப்புரை ஆற்றுகிறார். இம்மாநாட்டில் திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய 6 மாவட்டங்களை சேர்ந்த 1.30 லட்சம் இளைஞரணி நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் பங்கேற்று பேசிய உதயநிதி ஸ்டாலின் பேசுகையில், "இன்று பல கட்சிகள் உறுப்பினர்கள் சேர்க்கவே தடுமாறுகின்றனர். ஆனால் திமுகவில் இன்று நாம் பூத் கமிட்டி வரை நிர்வாகிகளை நியமித்துள்ளோம். இன்று 6



மாவட்டங்களின் 1.30 லட்சம் பூத் கமிட்டி நிர்வாகிகள் இங்கு வந்துள்ளீர்கள்.

மாநாடு என்றால் நூற்றுக்கணக்கில் இளைஞர்களை திரட்டுவதே பல கட்சிகளுக்கு சவாலாக உள்ளது. இது கணக்குகாட்ட கூட்டப்பட்ட கூட்டமில்லை. எதிரிகள் கூடும் தப்புக்கணக்கை பொய்யாக்க கூடிய கூட்டம். இளைஞர்கள் என்றால் கட்டுபாடு இருக்காது, காட்டாறு போல கட்டுப்படுத்த முடியாது என்ற பிம்பம் இப்போது கட்டமைக்கப்படுகிறது.

ஆனால் நம் இளைஞரணி கூட்டம் மிகுந்த கட்டுப்பாடுள்ள கூட்டம். கட்டுப்பாடு இல்லாத ஒரு கோடி பேரை வைத்துக்கொண்டும் ஒன்றும் சாதிக்க முடியாது. உங்களைப் போன்ற கட்டுப்பாடுள்ள கூட்டம் தமிழகத்துக்கே பலம்.

நம் கட்சியினர் ஆதிக்கத்துக்கு அடிபணிந்தது கிடையாது. சமீபத்தில் குஜராத்தில் பேசிய அமித் ஷா, பிஹாரில் வென்றுவிட்டோம் அடுத்த இலக்கு தமிழ்நாடு என்கிறார். அமித் ஷாவுக்கும் அவரின் அடிமை கூட்டத்துக்கும் ஒன்று சொல்கிறேன். இதுபோன்ற எந்த மிரட்டலையும் எதிர்கொள்ள கருப்பு சிவப்பு படை தயாராக உள்ளது. அப்படிப்பட்ட நம்மை குஜராத்தில் உட்கார்ந்துகொண்டு மிரட்டி அடிபணிய வைக்க முடியாது.

நீங்கள் பிஹார், உ.பி. ம.பியில் வென்றிருக்கலாம். ஆனால் தமிழகத்தில் உங்களால் நுழைய முடியாது. பாஜக என்பது மதம் பிடித்த யானை. அந்த யானையை அடக்கும் அங்குசம் முதல்வர் ஸ்டாலின் கையில் உள்ளது. இது மோடிக்கு தெரியும். அதனால்தான் பழைய அடிமைகள், புதிய அடிமைகள் மூலம் தமிழகத்தில் நுழைய பார்க்கிறார்கள்.

அதிமுக பொதுக்குழு தீர்மானத்தில் இபிஎஸ்ஸை முதல்வராக்குவதாக தீர்மானம் போட்டுள்ளார்கள். அதிமுக இன்ஜின் இல்லாத கார். அந்த காரை பாஜக எனும் லாரி இழுத்துக்கொண்டு போகப்பார்க்கிறார்கள். பாசிச சக்தியிலிருந்து தமிழகத்தை காக்கும் ஆற்றல் திமுகவுக்கு மட்டுமே உள்ளது.

அதனால்தான் தமிழகத்தில் ஏதாவது கலவரத்தை செய்ய பாஜக நினைக்கிறது. வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் இளைஞரணிக்கு அதிக வாய்ப்பு கொடுக்க வேண்டுமென திமுக தலைவரை கேட்டுக்கொள்கிறேன். களத்தில் கடுமையாக நமது இளைஞரணி உழைக்க வேண்டும். வானவில் பார்க்க அழகாக இருக்கும், பார்க்க மக்கள் கூடுவார்கள். ஆனால், உதய சூரியன் தான் வெளிச்சம் தரும்." என்றார்.

## தவெக வேட்பாளர்கள் அறிவிப்பா? ஊடக கணிப்புகளுக்கு புஸ்ஸி ஆனந்த் பதில்

திருச்செங்கோடு, டிச.15-

: "தவெகவின் வேட்பாளர்களை தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் மட்டும் தான் அறிவிப்பார்" என அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தெரிவித்தார்.

தவெக பிரச்சார பொதுச் செயலாளரான அருண் ராஜ், திருச்செங்கோடு தொகுதியில் போட்டியிடுவார் எனவும், அவரை மூத்த தலைவர்களான செங்கோட்டையன் மற்றும் புஸ்ஸி ஆனந்த் ஆகியோர் இன்று அறிமுகப்படுத்துவார்கள் எனவும் தகவல் வெளியானது.

இந்த நிலையில், திருச்செங்கோட்டில் இன்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், "ஒவ்வொரு தொகுதியிலும் தலைவரின் அறிவுறுத்தலின்படி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நேற்று சோழிங்கநல்லூர், இன்று திருச்செங்கோட்டில் நடைபெறுகிறது.

இங்கே நான் ஒன்றை தெளிவுப்படுத்த விரும்புகிறேன். தவெகவின் வேட்பாளர்களை தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் மட்டும் தான் அறிவிப்பார். ஊடகவியலாளர்கள் தயவு செய்து எதையாவது ஒன்றை போட்டுவிடாதீர்கள். வரும் 2026ம் ஆண்டு தேர்தலில் தவெக தலைவர் விஜய் முதல்வராக வருவார்.

தவெக தலைவர் விஜய்யை முதல்வராக அமர வைக்கும் வேலையை செங்கோட்டையன் செய்வார். செங்கோட்டையன் சொல்வதை நாங்கள் செய்வோம். எந்த கட்சியாவது எங்களைப்போல் மாநாடு நடத்த முடியுமா. மற்ற கட்சிகள் எல்லாம் ரூ.200, ரூ.300 கொடுத்து தான் கூட்டம் கூட்ட வேண்டும்.



ஆனால் விஜய் வருகிறார் என சொன்னால் கூட்டம் தானாக வந்து சேரும்.

ஈரோட்டில் வரும் 18ம் தேதி தவெக கூட்டம் நடைபெற உள்ளது. அன்று செங்கோட்டையன் கலக்குவார். மக்கள் தவெகவுக்கு ஓட்டுப்போட தயார். செங்கோட்டையன் தன்னிடம் பலர் செல்ஃபி எடுப்பதாக மேடையில் கூறினார். அதற்கு தலைவர் விஜய் தான் காரணம். தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் தலைவர் விஜய் தான் வேட்பாளர்.

அனைத்து தொகுதிகளிலும் தவெக வெற்றி பெறுவதற்கு அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டும். தலைவர் விஜய் உச்சத்தை விட்டுட்டு வந்துள்ளார். தமிழக மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என உச்சத்தை விட்டுட்டு வந்துள்ளார்.

தமிழகத்தில் புயல் என எந்த பாதிப்பு வந்தாலும் தவெக பாடுபடும். தமிழகம் இக்கட்டான சூழலில் உள்ளது. தமிழகத்தை மாறி மாறி ஆட்சி செய்து ஏமாற்றி விட்டார்கள் என மக்கள் நினைக்கின்றனர். அதன் வெளிப்பாடு தான் இங்கு கூடியுள்ள கூட்டம்.

யாருக்காவது தைரியம் இருந்தால் கூட்டம் போடுங்கள், அனைவரும் வாருங்கள் என சொல்லுங்கள் வருவார்களாக என பார்ப்போம். ஆனால் தவெக தலைவர் விஜய் வந்தால் கூட்டம் தானாக வந்துவிடும். மின் கட்டண உயர்வால் விசைத்தறிக் கூடங்கள் மூடுவிழா கண்டுவிட்டது. கூடிய விரைவில் தவெகவுக்கு அருமையான சின்னம் வழங்கப்பட உள்ளது. சின்னம் வந்த 15 நிமிடத்தில் உலகப் புகழ் பெறும்." என்றார்.

இந்தக் கூட்டத்தில் நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன், தவெக பிரச்சார பொதுச் செயலாளரான அருண் ராஜ், மாவட்ட செயலாளர்கள் செந்தில்நாதன், சதீஸ், பிரதீப் உள்பட கட்சியின் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## காங்கிரசின் சித்தாந்தத்தை மக்கள் வலுப்படுத்த வேண்டும் : ராகுல் பேச்சு

புதுடில்லி, டிச.15-

'' நாட்டை பாதுகாப்பதற்காக காங்கிரசின் சித்தாந்தத்தை மக்கள் வலுப்படுத்த வேண்டும்,'' என காங்கிரஸ் எம்பி ராகுல் பேசினார்.

உண்மை வெல்லும்

ஓட்டுத் திருட்டுக்கு எதிராக டில்லி ராம் லீலா மைதானத்தில் காங்கிரஸ் பேரணி நடத்தியது. அதில் காங்கிரஸ் எம்பி ராகுல் பேசியதாவது: பாஜவிடம் அதிகாரம் உள்ளதால் ஓட்டுத் திருட்டில் ஈடுபடுகின்றனர். உண்மைக்கும், பொய்க்குமான போராட்டத்தில் தேர்தல் கமிஷன் பாஜ உடன் இணைந்து பணியாற்றுகிறது. தேர்தல் கமிஷன் என்பது நாட்டுக்கானது. மோடிக்கானது அல்ல



என்பதை அந்த அமைப்பு நினைவில் வைத்திருக்க வேண்டும். காலதாமதம் ஆனாலும், உண்மையே நிச்சயம் வெல்லும்.

அகற்றுவோம்

மஹாத்மா காந்தி சத்தியமே பிரதானமானது என நம்பினார். ' சத்தியம், சிவம், சுந்தரம்', ' சத்தியமே வெல்லும்' ஆகியவற்றை நாம் கேட்டிருக்கிறோம். நமது கொள்கையும், நமது மதமும், சத்தியத்தை எல்லாவற்றுக்கும் மேலாக வைக்கின்றன. இன்று நாட்டில் நடந்து கொண்டிருக்கும் போராட்டமே இதுதான். உண்மையை நிலைநிறுத்தி, உண்மைக்கு பின்னால் நின்று இந்தியாவில் இருந்து நரேந்திர மோடி, அமித்ஷா, அரசை அகற்றுவோம்.


அவர்கள் ஓட்டை திருடுவார்கள். தேர்தலின் போது 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பார்கள். தேர்தல் கமிஷன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேர்தல் கமிஷனர் என்ன செய்தாலும் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாதபடி சட்டத்தை நரேந்திர மோடி அரசு மாற்றியுள்ளது. நாட்டை பாதுகாக்கும் ஒரே சித்தாந்தமான காங்கிரசின் சித்தாந்தத்தை பலப்படுத்த வேண்டியது நாட்டு மக்களின் கடமை. இவ்வாறு ராகுல் பேசினார்.

## கனடாவில் இந்தியர்கள் 2 பேர் சுட்டுக்கொலை

ஒட்டாவா, டிச.15-

கனடாவில் நடந்த தாக்குதலில் பஞ்சாபைச் சேர்ந்த இரண்டு இந்திய வம்சாவளி இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கனடாவின் தென்கிழக்கு எட்மண்டனில், பஞ்சாபைச் சேர்ந்த இரண்டு இந்திய வம்சாவளி இளைஞர்கள், அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இறந்தவர்கள் பஞ்சாபின்




மான்சாவில் உள்ள உத்தத் சைதேவாலா கிராமத்தைச் சேர்ந்த குர்தீப் சிங் (27) மற்றும் ரன்வீர் சிங் (18) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொழில் வாய்ப்புகளைத் தேடி இரண்டு இளைஞர்களும் தனித்தனியாக கனடாவுக்குச் சென்றிருந்தனர். அவர்கள் அங்கு வேலை தேடி வந்த நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்தது விசாரணையில் தெரியவந்தது.

எட்மண்டன் போலீசார் விசாரணையை தொடங்கி உள்ளதாக தெரிவித்துள்ளனர். கனடா போலீசார் வேறு சில பஞ்சாப் இளைஞர்களை சுற்றி வளைத்து இந்த விவகாரம் குறித்து விசாரித்து வருவதாக வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

## சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் சொத்து முடக்கம்

சென்னை, டிச.15-

'சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ்' நிறுவனத் தின், 107 கோடி ரூபாய் சொத்துகளை மீட்ட அமலாக்கத் துறை, அவற்றை வங்கிகளிடம் ஒப்படைத்துள்ளது.

சென்னை சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் நிறுவனம், 2017ல், இந்தியன் வங்கியில் தவறான நிதிநிலை அடங்கிய ஆவணங்களை தாக்கல் செய்து, இரண்டு கட்டங்களாக, 240 கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளது.

எந்த காரணத்திற்காக கடன் பெறப்பட்டதோ, அதற்காக அப்பணம் பயன் படுத்தாமல், வேறு காரணங்களுக்காக முறைகேடாக பயன்படுத்தி, மோசடி செய்தது கண்டறியப் பட்டது.

இதனால், இந்தியன் வங்கிக்கு, 312.13 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்ட தாக, முதலில் சி.பி.சி.ஐ.டி., போலீசில் புகார் அளிக்கப் பட்டது. பின் வழக்கு, சி.பி.ஐ.,க்கு மாற்றப்பட்டது .

இந்த வழக்கில் சட்டவிரோத பண பரிமாற்றம் நடந்த தால், அமலாக்கத் துறையும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்தியன் வங்கி புகாரில், சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் நிறுவனத்துக்கு



சொந்தமான, 235 கோடி ரூபாய் சொத்துகளை முடக்கி, பிப்., 17ம் தேதி, இந்தியன் வங்கியிடம் அமலாக்கத் துறை ஒப்படைத்தது.

மீதமுள்ள, 40 கோடி ரூபாய் சொத்துகளை வங்கியிடம் ஒப்படைக்க, உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அவையும் கைப்பற்றப்பட்டு நேற்று ஒப்படைக்கப்பட்டன. இது வரை, 275 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகள், இந்தியன் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன.

அதேபோல், தவறான நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தும், சரக்கு இருப்புகளை உயர்த்தி காட்டியும் ஆக்சிஸ் வங்கியிடம், 118.88 கோடி ரூபாயை, சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் நிறுவனம் கடன் பெற்றது. இதனால், 81.90 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்ட தாக, மத்திய குற்றப்பிரிவில், அந்த வங்கி புகார் அளித்தது.

இந்த வழக்கில் அமலாக்கத் துறை நடத்திய விசாரணையில், சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் நிறுவனத்தின், 74.06 கோடி ரூபாய் சொத்துகள், 2023ல் முடக்கப்பட்டன.

தற்போது, 66.93 கோடி ரூபாய் மதிப்பிலான நான்கு சொத்துகளை முடக்கி, ஆக்சிஸ் வங்கியிடம், அமலாக்கத் துறை நேற்று முன்தினம் ஒப்படைத்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களில், சரவணா ஸ்டோர்ஸ் கோல்டு பேலஸ் நிறுவனத்திடம் இருந்து, 107 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை கைப்பற்றி, வங்கிகளிடம் ஒப்படைத்து இருப்பதாக, அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.



# காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக... என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி

## ஒசெ.யோக. கிருஷ்ணகுமார், கோதண்டபாணி, வரதராஜன் பங்கேற்பு

காளையார் கோவில், டிச.15-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்கவும், மாவட்டக்கழக செயலாளர், தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அறிவுறுத்தலின் பேரிலும் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற முன்னெடப்பானது சிவகங்கை மாவட்டத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் சிரமம் ஊராட்சி சிரமம் கிராமத்தில் தெற்கு ஒன்றியக்கழக செயலாளர் யோக. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றியக்கழக நிர்வாகி திருநாவுக்கரசு வரவேற்புரையாற்றிட ஒன்றிய துணைச்செயலாளர் கோலாந்தி கோதண்டபாணி, ஒன்றிய அவைத்தலைவர் வரதராஜன், மாவட்ட பிரதிநிதி தோக்கப்பன், மாணவரணி சொக்கு ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தினிடையே தெற்கு ஒன்றியக்கழக செயலாளர் யோக கிருஷ்ணகுமார் கலந்து கொண்டு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற முன்னெடுப்பின் அவசியத்தைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் கிளைக்கழக நிர்வாகிகள் ஆறுமுகம், சரவணன், இளைஞரணி மோகன், மோனேஷ், மாணவரணி கலைச்செல்வம் புதுக்குளம் மோகன் உள்ளிட்ட ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள் மற்றும் கிராமப் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் குறைந்தபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 3 டிகிரி வரை குறைய வாய்ப்பு

சென்னை, டிச.15-

தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் குறைந்தபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 3 டிகிரி செல்சியஸ் குறைந்து குளிர் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகம் நோக்கி வீசும் கிழக்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக, நாளை (டிச.15) கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

உள் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழகம், புதுச்சேரியில் அதி காலை வேளை யில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். 16ம் தேதி கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 17ம் தேதி தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 18ம் தேதி தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 19, 20 தேதிகளில் தமிழகம், புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் குறைந்தபட்ச வெப்பநிலை (குளிர்) ஒரு சில இடங்களில் வழக்கத்தை விட 3 டிகிரி செல்சியஸ் வரை குறைவாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். குறைந்தபட்ச வெப்பநிலை 20 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

இன்று காலை 8.30 மணி வரை பதிவான குறைந்தபட்ட வெப்பநிலை அளவுகளின்படி, மலைப் பகுதிகளில் அதிகபட்சமாக ஊட்டியில் 5.6 டிகிரி, கொடைக்கானலில் 6.6 டிகிரி, குன்னூரில் 9 டிகிரி, ஏற்காடில் 10 டிகிரி செல்சியஸ், சமவெளிப் பகுதிகளான

தருமபுரியில் 16.5 டிகிரி, வேலூர், கோவையில் 17 டிகிரி, சேலத்தில் 17.5 டிகிரி, திருச்சி, மதுரை, நாகப்பட்டினத்தில் தலா 19 டிகிரி, புதுச்சேரி, சென்னை மீனம்பாக்கத்தில் 20 டிகிரி, நுங்கம்பாக்கத்தில் 21 டிகிரி குளிர் பதிவாகியுள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளையும், நாளை மறுதினமும் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிமீ வேகத்திலும் இடையி டையே 55 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# "தமிழகத்தில் வெல்வோம் என்ற அமித் ஷா முழக்கத்தை பொருட்படுத்தாமல் கடக்க முடியாது" - திருமாவளவன்

அரூர், டிச.15-

"தமிழகத்தில் வெற்றி பெறுவோம் என்று அமித் ஷா முழங்குகிறார். அவர் எப்படி அதனைச் சொல்கிறார் என்று யோசிக்க வேண்டும். அதனை பொருட்படுத்தாமல் கடந்து செல்ல முடியாது" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே முன்னாள் அமைச்சர் பி. பழனியப்பன் இல்லத்திருமண விழா முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற்றது.

இவ்விழாவில் பங்கேற்ற விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் பேசுகையில், "தருமபுரி பகுதியில் திமுக கூட்டணி எந்தளவுக்கு வலுவாக உள்ளது என்பதற்கு நாடாளுமன்ற தேர்தல் வெற்றியே சாட்சி. மீண்டும் அந்த வெற்றியை உறுதி செய்யவேண்டும். அதே போல் தமிழ் மண்ணையும் மக்களையும் பாதுகாக்க வருகிற சட்டப்பேரவைத் தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டும். ஆனால்



இதனை தடுக்க சிலர் சதி செய்கின்றனர்.

அமித் ஷா, தமிழகத்தில் வெற்றி பெறுவோம் என்று முழங்குகிறார். அவர் எப்படி அதனை சொல்கிறார் என்று நினைக்க வேண்டும். அதனை பொருட்படுத்தாமல் கடந்து செல்ல முடியாது. அவர் ஏற்கனவே பிஹாரில் சொல்லியது போல் வெற்றி பெற்றனர். கேரளாவில் மாநகராட்சியை கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளனர். அக்கட்சிக்கு வாக்குச்சாவடி முகவர் இல்லை, கட்சி கட்டமைப்பு இல்லை. ஆனாலும் முழங்குகிறார். பீகார் போல் வாக்கு திருட்டு முறையில் தமிழகத்திலும் வெற்றி பெற நினைக்கிறார்.

திமுக அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கட்டமைப்பு வைத்துள்ளது. இந்தியாவில் எந்த கட்சிக்கும் இந்த கட்டமைப்பில்லை. கடந்த தேர்தலில் முதல்வர் அவர்களின் சதிகளை முறியடித்தார். இந்த தேர்தலிலும் ஒற்றுமையாக செயல்பட்டு நாம் முறியடிக்க வேண்டும்.

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள சர்வே கல்லை வைத்து, நீதித்துறைய வளைத்து, காவல் துறை, அதிகாரிகளை நீதிமன்றத்திற்கு வரவழைத்துள்ளனர். இதற்கெல்லாம் அச்சப்படாமல், துணிச்சலாக முதல்வர் உள்ளார்.

தமிழ்நாட்டை காக்க அதிகார கும்பலை தடுக்க கூட்டணிக் கட்சியினர் ஒருங்கிணைந்து களப்பணியாற்ற வேண்டும் என்றார்.





# தமிழ்நாடு அறிவியல் இயக்க காரைக்குடி கிளை மாநாடு

காரைக்குடி, டிச.15-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நேஷனல் கேட்டரிங் மற்றும் சேப்டி கல்லூரி கூட்டரங்கில் தமிழ்நாடு அறிவியல் இயக்க காரைக்குடி கிளை மாநாடு சிறப்பாக நடைபெற்றது. கிளைத் தலைவர் செந்தில்குமார் தலைமை வகித்து தலைமை உரையாற்றினார். மாவட்டத் துணைத்தலைவர் அரிமா சையது முன்னிலை வகித்து சிறப்புரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் பிரபு வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாநில செயற்குழு உறுப்பினர் ஜீவானந்தம் அறிவியல்




இயக்க செயல்பாடுகள் குறித்து நோக்க உரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களுக்கு விஞ்ஞான துளிர் மற்றும் புத்தகம் நினைவு பரிசாக வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி அறிவியலை அறிவோம் அறிவியலால் இணைவோம் என்ற மையக்கருத்தை குறித்து சிறப்புரையாற்றி புதிய நிர்வாகிகளை முன்மொழிந்தார். புதிய நிர்வாகிகளின் தேர்வில் கிளைத் தலைவராக அரிமா சையது கிளைச் செயலாளராக அரிமா டென்சிங் அருள்ராஜ் கிளைப் பொருளாளராக சத்தியமூர்த்தி துணைத்தலைவராக கிருஷ்ணவேணி துணைச் செயலாளராக சபிதாபானு தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்டத் துணைத் தலைவர் முனைவர் சேவற்கொடியோன் பேராசிரியர் முனைவர் கருணாகரன் கண்ணங்குடி கிளைச் செயலாளர் குருமூர்த்தி எழுத்தாளர் மோகன் ஆசிரியர் பழனியப்பன் தமிழ் செம்மல் மெய்யாண்டவர் புலவர் முருகேசன் ஆசிரியை மகாலட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட துணைச் செயலாளர் ராசு நிகழ்ச்சிகளை சிறப்பாக ஒருங்கிணைத்தார். துணைச் செயலாளர் சபிதாபானு நன்றி கூறினார். மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# என்எம்எம்எஸ்: மத்திய அரசு வழங்கும் கல்வி உதவித் தொகை தேர்வுக்கு விண்ணப்பிப்பது எப்படி?

சென்னை, டிச.15-

மத்திய அரசின் தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்பு உதவித்தொகை திட்டத்தின் (என்எம்எம்எஸ்) கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 8ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக ஆண்டுதோறும் மாணவர்களுக்கு என்எம்எம்எஸ் தேர்வு நடத்தப்படுகிறது.

இந்த தேர்வு மூலம் தமிழகத்தில் 6,695 பேர் உட்பட நாடு முழுவதும் ஒரு லட்சம் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். அவர்களுக்கு 9ம் வகுப்பு முதல் பிளஸ் 2 முடிக்கும் வரை மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படும்.

நடப்பு (2025-26) கல்வி ஆண்டுக்கான என்எம்எம்எஸ் தேர்வு ஜனவரி 10ம் தேதி நடத்தப்பட உள்ளது. இதற்கான இணையதள விண்ணப்ப பதிவு நேற்று தொடங்கியது. விருப்பம் உள்ள 8ம் வகுப்பு மாணவ, மாணவிகள் தேர்வுத் துறை இணையதளத்தில் (dge.tn.gov.in) விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

அதை பூர்த்தி செய்து, தேர்வுக் கட்டணம் ரூ.50ஐ சேர்த்து, தாங்கள் படிக்கும் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் டிசம்பர் 20ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இது குறித்த கூடுதல் விவரங்களை அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்களை தொடர்பு கொண்டு மாணவர்கள் அறிந்து கொள்ளலாம் என்று தேர்வுத் துறை தெரிவித்துள்ளது.

# சென்னை விமான நிலையத்தில் ஒரே நாளில் 56 விமான சேவைகள் ரத்து

சென்னை, டிச.15-

சென்னை விமான நிலையத்தில் ஒரே நாளில், 56 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானங்களின் சேவைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக நேற்று 12வது நாளாக சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.

நேற்று அதிகாலையில் இருந்து நள்ளிரவு வரையில் சென்னையில் இருந்து புறப்படும் 28 விமானங்கள், வரும் 28 விமானங்கள் என, மொத்தம் 56 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

இவை அனைத்தும் கொல்கத்தா, ஹைதராபாத், கொச்சி, புனே, பாட்னா, டெல்லி, மும்பை, அகமதாபாத், புவனேஸ்வர், பெங்களூர், திருவனந்தபுரம் கோவை, துபாய், இந்தோனேசியா புறப்பாடு மற்றும் வருகை விமானங்களாகும். இதனால், பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

# 60 தேவஸ்தான கோயில்களில் இலவச அன்னதானம்



திருமலை, டிச.15-

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பக்தர்கள் உண்டியலில் செலுத்தும் காணிக்கை பணத்தை அரசு வங்கிகளில் டெபாசிட் செய்து, அதன் மூலம் வரும் வட்டியில், பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் பக்தர்களும் அன்னதானத்துக்கு நன்கொடையும் வழங்கி வருகின்றனர். தற்போது நாள் ஒன்றுக்கு அன்னதானம் செய்ய திருமலை திருப்பதி தேவஸ்தானம் ரூ.44 லட்சம் கட்டணமாக நிர்ணயித்துள்ளது.

சாதாரண நாட்களில் 1.90 லட்சம் பேர் வரையிலும், சனி, ஞாயிறுக்கிழமைகளில் சுமார் 2 லட்சம் பேருக்கும், வைகுண்ட ஏகாதசி, பிரம்மோற்சவம், ரதசப்தமி போன்ற விசேஷ நாட்களில் தினமும் 2 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், ஸ்ரீ வெங்கடேஸ்வரா அன்னதான அறக்கட்டளை மூலம் சென்னை, வேலூர் உட்பட 60க்கும் மேற்பட்ட தேவஸ்தான கோயில்களில் அன்னதானம் வழங்க வேண்டுமென ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பிறப்பித்த உத்தரவை திருப்பதி தேவஸ்தானம் விரைவில் அமல்படுத்த தீர்மானித்துள்ளது.



# திருச்சேறை சாரநாதப் பெருமாள் கோயிலில் மராமத்து செய்யப்பட்ட தேர் வெள்ளோட்டம்

கும்பகோணம், டிச.15-

கும்பகோணம் வட்டம் திருச்சேறையில் உள்ள சாரநாயகி தாயார் உடனாய சாரநாதப் பெருமாள் கோயிலில் ரூ.1.19 கோடி மதிப்பில் 120 நாளில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்ட தேருக்கான வெள்ளோட்டம் நடைபெற்றது.

சிறப்பு பெற்ற இக்கோயிலில் ஆண்டுதோறும் தைப்பூசம் அன்று தேரோட்டம் நடைபெறுவது வழக்கம். இந்த நிலையில் பல ஆண்டுகளுக்கு முன் வடிவமைக்கப்பட்ட மரத்தினாலான தேர் கட்டுமான ங்கள் சேதமடைந்து காணப்பட்டது. இதையடுத்து, ரூ.1.19 கோடி மதிப்பில் மராமத்து பணிகள் மேற்கொண்டு தேர் வடிவமைக்க முடிவு செய்யப்பட்டது.

இதைத்தொடர்ந்து பணிகள் தொடங்கி 120 நாட்களில் வடிவமைக்கப்பட்ட தேரின் வெள்ளோட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு தேரின் வடம் பிடித்து இழுத்துச் சென்றனர். இதில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன், முன்னாள் எம்பி செ.ராமலிங்கம், அறநிலையத் துறை தக்கார் ச.சிவசங்கரி, செயல் அலுவலர் ரெ.அய்யப்பன், கணக்காளர் ராஜா மற்றும் கோயில் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இது தொடர்பாக கோயில் அதிகாரிகள் கூறியதாவது: "இந்தக் கோயிலில் பல ஆண்டுகளுக்கு முன் வடிவமைக்கப்பட்ட தேர், கடந்தாண்டு வரை தேரோட்டம் நடைபெற்றது. ஆனால் தேர் அச்சு, 4 சக்கரம் மற்றும் மொம்மைகளை தவிர மற்ற மரத்தினாலான கட்டுமானங்கள் சேதமடைந்து காணப்பட்டது.

இதனால், ரூ.1.19 கோடி மதிப்பில், 22 அடி உயரத்தில், 20 அடி அகலத்தில், 120 டன் எடையில் 120 நாட்களுக்குள் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு தேர் வடிவமைக்கப்பட்டு தற்போது வெள்ளோட்டம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து வழக்கம் போல் தைப்பூச தினமான இந்த தேர் பயன்படுத்தப்படவுள்ளது. அதன்படி 2026ம் ஆண்டு பிப்.1ம் தேதி முதல் இந்த தேர், தேரோட்டத்தில் பயன்பாட்டிற்கு வரும் என்று கோயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 4வது புத்தகத் திருவிழா காஞ்சியில் டிச.19ல் தொடக்கம்

**காஞ்சி, டிச.15–**

ஆட்சியர் கலைச்செல்வி வெளியிட்ட அறிக்கை: காஞ்சிபுரம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள அண்ணா காவல் அரங்கம் மைதானத்தில், 4வது புத்தகத் திருவிழா நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்ட மக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் மாவட்ட நிர்வாகம், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் (BAPASI) இணைந்து, இந்த நான்காவது புத்தகத் திருவிழாவை நடத்துகின்றனர்.

இந்த புத்தகத் திருவிழா டிச.19 முதல் டிச.29ம் தேதி வரை 11 நாட்கள் நாள்தோறும் காலை 10 மணிக்கு தொடங்கி இரவு 9 மணி வரை நடைபெறும்.



இதில் தென்னிந்தியா முழுவதும் இருந்து பல்வேறு பதிப்பாளர்கள், புத்தக வெளியீட்டாளர்கள் கலந்து கொள்ளும் வகையில் 100க்கும் மேற்பட்ட புத்தக அரங்குகள் அமைக்கப்பட்டு, 1,000க்கும் மேற்பட்ட எழுத்தாளர்களின் படைப்புகள், லட்சத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட உள்ளன.

இப்புத்தகக் கண் காட்சி புத்தகப் பிரியர்களுக்கு மாபெரும் விருந்தாகும். மேலும், புத்தகத் திருவிழாவில் தினந்தோறும் காலை முதல் மாலை வரை சிறப்பு அழைப்பாளர்களின் கருத்துரைகள், சிந்தனை தூண்டும் பேச்சாளர்களின் கருத்துரைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான பல்வேறு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

# மார்கழி மாதம் அதிகாலையில் கோலமிடுவது ஏன் முக்கியமானது தெரியுமா ?



மார்கழி மாதம் என்றாலே அனைவருக்கும் நினைவிற்கு வருவது குளிர், கோவில்களில் அதிகாலையில் நடைபெறும் பூஜைகள், அதிகாலை எழுந்து வாசலில் கோலமிடும் பெண்கள் இவைகள் தான். இது மார்கழி மாதத்தின் தனிச்சிறப்பாகும். மற்ற மாதங்களில் இல்லாமல் மார்கழி மாதத்தில் மட்டும் அதிகாலையில் எழுந்து எதற்காக கோலமிட வேண்டும் என வலியுறுத்துகிறார்கள் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

மார்கழி மாதம், வண்ண வண்ண கோலங்கள் இந்த இரண்டையும் பிரிக்க முடியாது. அதிகாலை நேரத்தில் பெண்கள் வாசலில் அழகான கோலங்களை இடுவது, தமிழர் பண்பாட்டின் ஆயிரம் ஆண்டு பாரம்பரியத்தை நினைவூட்டுகிறது. கோலம் போடும் பழக்கம் சங்க கால இலக்கியங்கள் முதல், 13ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகள் வரை பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒரு பண்பாட்டின் பின்னால் எத்தனை ஆன்மீக, அறிவியல் ரகசியங்கள் இருப்பதை பலரும் அறியவில்லை.

மார்கழி மாதத்தில் பெண்கள் அதிகாலையில் எழுந்து குளித்து விட்டு, வீட்டு வாசலில் பல வண்ணங்களில் கோலமிடுவார்கள். மார்கழி மாதத்திற்கே உரிய தனித்துவமான சிறப்புகளில் இதுவும் ஒன்றாகும். இந்த மாதத்தில் பல பகுதிகளில் கோலப் போட்டிகள் கூட நடத்தப்படுவது உண்டு. மார்கழி மாதம் மிகவும் புண்ணியமான மாதம் என்பதால் இந்த மாதத்தில் அதிகாலையில் எழுந்து வீட்டை விட்டு வெளியே வர வேண்டும் என்பதற்காக தான் பெண்கள் வாசலில் கோலமிட வேண்டும் என்றும், ஆண்கள் பஜனைகள் பாடி கோவிலுக்கு செல்ல வேண்டும் என்றும் வழக்கம் வைத்தார்கள்.

ஆன்மீக ரீதியாக பார்த்தால், மார்கழி மாதம் தேவர்களின் அதிகாலை வேளையாகும். அவர்கள் கண் விழிக்கும் நேரத்தில் நாமும் எழுந்து சுத்தமாக இறை வழிபாட்டில் ஈடுபட்டால் நம்முடைய விருப்பங்கள் நிறைவேறவும், அதற்கு தடையாக இருக்கும் பாவங்கள், கர்ம வினைகள் அகலவும் துணையாக இருப்பார்கள் என்றும் நம்பப்படுகிறது. அது மட்டுமல்ல எந்த ஒரு காரியத்தையும் தொடர்ந்து 30 நாட்கள் படைபிடித்து விட்டால் அதற்கு பிறகு அதுவே பழக்கமாகி விடும். அந்த அடிப்படையில் தினமும் பிரம்ம முகூர்த்த வேளையில் எழுவதால் அளவில்லாத நன்மைகளை பெறலாம் என்பதற்காக மார்கழி மாதத்தில் பக்தி செய்ய வலியுறுத்தினார்கள்.

அறிவியல் ரீதியாக பார்த்தால், மார்கழி மாதத்தில் தான் ஓசோன் படலம் பூமிக்கு மிக அருகில் வருகிறது. அதிகாலையில் ஓசோன் படலத்தில் பட்ட குளிர்ந்த காற்று, நம்முடைய உடலில் படும் போது தோல் நோய்கள் போன்ற நோய்கள் நீங்குகின்றன. சுவாசப் பிரச்சனைகள் சரி செய்யப்பட்டு, உடலுக்கும், மூளைக்கும் புத்துணர்ச்சியை தருகிறது. இதனால் உடலில் நோய் எதிர்சக்தி அதிகரிப்பதாகவும் சொல்லப்படுகிறது. இது அறிவியல் ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டு, அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர்த்து, அதிகாலை பிரம்ம முகூர்த்த நேரத்தில் வாசலில் சாணம் தெளித்து கோலமிடுவதால் வீட்டில் நேர்மறை ஆற்றலை வரவழைக்கிறது. சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக்கொள்கிறது. இறைவனை வீட்டிற்கு வரவேற்கும் முறையாகவும் கருதப்படுகிறது. சாணம் தெளித்தால் கிருமிகள் அழிகின்றன. தரை சுத்தமாகிறது. சூழல் புனிதமாகிறது. அரிசி மாவில் கோலம் போடுவதால் எறும்புகள், பறவைகள் போன்ற உயிர்களுக்கு உணவாக அமைகிறது.

மார்கழியில் அதிகாலையில் எழுந்து பெண்கள் கோலம் போடுவதால் மனதை ஒருமுகப்படுத்துகிறது. நினைவாற்றலை அதிகரிக்கிறது. உடல், மனம் புத்துணர்ச்சியடைகிறது. குளிரை தோற்கடித்து ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. சிக்கு கோலங்கள் வெறும் கோடுகள் அல்ல. அவை கணித வடிவமைப்புகள். சுருள் மற்றும் புள்ளி கணிதக் கோட்பாடுகளின் வெளிப்பாடு. பெண்களின் புத்திகூர்மை மற்றும் கவனச் செலுத்தலை வளர்க்கிறது. வீட்டிற்கு வரக் கூடிய லக்ஷ்மி கடாட்சம் வாசலில் இருக்கும் கோலமாகும். இது வீட்டிற்கு மங்களத்தை தருகிறது. எதிர்மறை ஆற்றல்களை தடுக்கிறது. செல்வத்தை ஈர்க்கும் ஆற்றலை உருவாக்குகிறது.

# மார்கழி மாதப் பிறப்பு 2025 எப்போது? இந்த நாளில் இதை மட்டும் செய்ய மறந்துடாதீங்க



"மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்" என கீதையில் பகவான் கிருஷ்ணர் கூறியதில் இருந்தே இந்த மாதத்தின் சிறப்பை அறிய முடியும். பெருமாளுக்குரிய புண்ணிய தரும் வைகுண்ட ஏகாதசி, ஆஞ்சநேயருக்குரிய அனுமன் ஜெயந்தி, சிவ பெருமானுக்குரிய ஆருத்ரா தரிசனம் போன்ற பல ஆன்மீக சிறப்பு தினங்களை கொண்ட மாதமாக மார்கழி மாதம் உள்ளது.

சூரிய பகவான் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ராசியில் பயணிப்பார். இப்படி அவர் ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு மாறுவதை சங்கராந்தி என குறிப்பிடுகிறோம். சங்கராந்தி என்றால் நகர்வு என்று பொருள். சில குறிப்பிட்ட ராசிகளில் சூரியன் தனது பயணத்தை மேற்கொள்வது சிறப்புக்குரியதாக கருதப்படுகிறது. அப்படி மிகவும் புண்ணியத்திற்குரிய மாதங்களில் ஒன்று தான் மார்கழி மாதம். சூரிய பகவான், தனுசு ராசியில் பயணிக்கும் மாதம் என்பதால் இதை தனுர் மாதம் என்றும், மார்கழி மாதத்தின் முதல் நாளை தனு சங்கராந்தி என்றும் குறிப்பிடுகிறோம்.

மார்கழி மாதத்தை ஆன்மீக மாதம் என்றும், புண்ணியம் சேர்க்கும் மாதம் என்றும் குறிப்பிடுவது உண்டு. இதற்கு காரணம், ஜோதிட ரீதியாக ஒன்பதாவதாக வரும் ராசி, தனுசு ராசி. ஜாதகத்தில் ஒன்பதாவது இடம் என்பது தந்தை, உயர்கல்வி, ஆன்மீகம், அதிர்ஷ்டம், குரு, வெளிநாட்டு பயணங்கள் ஆகியவற்றை குறிப்பதாகும். பொதுவாக ராசி கட்டங்களில் ஆறாவது இடத்தை குடும்ப ஸ்தானம் என்பது போல், ஒன்பதாவது இடத்தை ஆன்மீக ஸ்தானம் என்பார்கள். அதே போல் 12வது இடத்தை முக்தி ஸ்தானம் என்பார்கள்.

மார்கழி மாதம் கீதை பிறந்த மாதம் என்பதால் கிருஷ்ணர் வழிபாடும், பெருமாள் வழிபாடும் மகத்தானதாக சொல்லப்படுகிறது. இது தேவர்களின் பிரம்ம முகூர்த்த வேளை என்பதால் இந்த மாதத்தில் செய்யப்படும் வழிபாடுகள் இரண்டு மடங்கு அதிக பலனை தரும். நம்முடைய பாவங்கள், கர்ம வினைகள் அனைத்திலும் இருந்து விடுபட்டு, புண்ணியத்தை சேர்ப்பதற்கான மாதமாக குறிப்பிடப்படுகிறது.

இத்தகைய சிறப்பு மிகுந்த மாதமான மார்கழி மாதம், இந்த ஆண்டு டிசம்பர் 16ம் தேதியன்று பிறக்கிறது. அன்றைய தினம் காலை 07.07 மணி முதல் பகல் 12.18 மணி வரையிலான நேரத்தை தனு சங்கராந்தி புண்ணிய காலம் என்றும், காலை 07.07 மணி முதல் 08.51 மணி முதல் தனு சங்கராந்தி மகா புண்ணிய காலம் என்றும் சொல்கிறார்கள். இந்த நாளில் அதிகாலையில் எழுந்து புனித நீராடி, சூரிய பகவானை வழிபடுவதால் நல்ல ஆரோக்கியம், தெய்வீக அருள், வெற்றி, குடும்பத்தில் மகிழ்ச்சி ஆகியவை ஏற்படும். இந்த நாளில் தானங்கள் செய்வதும், கீதை மொழிகளை கேட்பதும் அந்த மாதத்தை தெய்வீக தன்மை கொண்டதாக ஆக்கும் என நம்பப்படுகிறது.

மார்கழி மாதம் பெருமாளுக்கு மட்டுமின்றி சிவ வழிபாட்டிற்கும் ஏற்றதாகும். மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து ஆண்டாள் பாடிய திருப்பாவை பாடல்களை பாடுவதுடன், மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை பாடல்களையும் பாடி வழிபட்டு, அருகில் இருக்கும் கோவிலுக்கு சென்று வழிபடுவதால் வேண்டுதல்கள் நிறைவேறும். நன்மைகள் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்கள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பு கடைபிடிப்பதால் விரைவில் திருமண கைகூடும். மனதிற்கு பிடித்த வரன் அமையும் என்பது நம்பிக்கை.

இந்த ஆண்டு மார்கழி மாதம், முருகப் பெருமானுக்குரிய செவ்வாய்கிழமையில், நரசிம்ம பெருமாளுக்குரிய சுவாதி நட்சத்திரத்தில் பிறக்கிறது. இது கூடுதல் விசேஷமானதாகும். அதனால் மார்கழி மாதப்பிறப்பு அன்று முருகன் வழிபாட்டு, பெருமாள் வழிபாடு என எது செய்தாலும் அது மிக அதிகமான பலனை தரும்.

# "மேக்ஸ்வெல் உள்ளிட்ட வெளிநாட்டு வீரர்களை விடுவித்தது ஏன்?" பஞ்சாப் பயிற்சியாளர் பாண்டிங் விளக்கம்




கிளென் மேக்ஸ்வெல், ஜோஷ் இங்கிலிஸ் உள்ளிட்ட வெளிநாட்டு வீரர்களை பஞ்சாப் கிங்ஸ் அணியில் இருந்து விடுவித்தது ஏன் என்பதை அந்த அணியின் தலைமை பயிற்சியாளராக ரிக்கி பாண்டிங் விவரித்துள்ளார்.

வரும் 16ம் தேதி ஐபிஎல்2026 சீசனுக்கான மினி ஏலம் நடைபெற உள்ளது. இதற்கு முன்னதாக 10 ஐபிஎல் அணிகளும் தங்கள் அணியில் தக்கவைத்த மற்றும் விடுவித்த வீரர்களின் பட்டியலை வெளியிட்டன. இந்நிலையில், இது குறித்து பாண்டிங் பேசியுள்ளார்.

"மேக்ஸ்வெல் உடன் நீண்ட காலம் இணைந்து பணியாற்றி உள்ளேன். அவரது ஆட்டம் மிகவும் பிடிக்கும். கடந்த ஆண்டு அவரது சிறந்த ஆட்டத்தை எங்களால் பெற முடியாமல் போனதும். மேலும், வரும் நாட்களில் எங்கள் அணியின் ஆடும் லெவனில் அவருக்கான இடம் இல்லை என கருதுகிறேன். அதனால் அவர் விடுவிக்கும் முடிவை எடுத்தோம்.

வெளிநாட்டை சேர்ந்த மற்றொரு ஆல்ரவுண்டரான ஆரோன் ஹார்டியை விடுவித்தது துரதிஷ்டவசமானது. அவருக்கும் கடந்த சீசனில் எங்கள் அணியின் ஆடும் லெவனில் வாய்ப்பு கிடைக்கவில்லை.

இந்த வரிசையில் மற்றொரு வீரராக இருப்பது ஜோஷ் இங்கிலிஸ். கடந்த சீசனின் பிற்பாதியில் தான் ஆடும் வாய்ப்பை பெற்றார். சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எதிர்வரும் சீசன் நடைபெறும் வேளையில் அவர் அணியுடன் இருப்பது சந்தேகம். அதை கருத்தில் கொண்டு இந்த முடிவை செய்தோம்" என பாண்டிங் கூறினார்.

பஞ்சாப் அணி தக்கவைத்த வீரர்கள்: பிரப்சிம்ரன் சிங், பிரியன்ஷ் ஆர்யா, ஷ்ரேயஸ் ஐயர், ஷஷாங் சிங், நேஹல் வதேரா, மார்க்கஸ் ஸ்டாய்னிஸ், அஸ்மதுல்லா உமர்சாய், மார்கோ யான்சன், ஹர்ப்ரீத் பிரார், சஹல், அர்ஷ்தீப் சிங், முஷீர் கான், அவினாஷ், மிச்சேல் ஓவன், சேவியர் பார்ட்லெட், ஃபெர்குசன், வைஷாக் விஜய்குமார், யாஷ் தாக்குர், விஷ்ணு வினோத்.

விடுவித்த வீரர்கள்: கிளென் மேக்ஸ்வெல், ஜோஷ் இங்கிலிஸ், ஆரோன் ஹார்டி, குல்தீப் சென்.

# "மனதளவில் திடமாக இருந்தால்..." வெற்றி ரகசியம் சொல்லும் திலக் வர்மா




மனதளவில் திடமாக இருந்தால் எந்த இடத்திலும் பேட் செய்ய களம் கண்டு, சிறப்பாக விளையாட முடியும் என இந்திய கிரிக்கெட் வீரர் திலக் வர்மா தெரிவித்துள்ளார்.

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரை தென் ஆப்பிரிக்காவும், ஒருநாள் தொடரை இந்தியாவும் வென்றன. 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 2 போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் முதல் போட்டியில் இந்தியாவும், இரண்டாவது போட்டியில் தென் அப்பிரிக்காவும் வென்றுள்ளன. மூன்றாவது போட்டி இன்று தரம்சாலாவில் நடைபெறுகிறது.

கடந்த போட்டியில் 214 ரன்கள் இலக்கை விரட்டிய இந்திய அணி 162 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதில் இந்திய அணி சார்பில் பேட்டிங் ஆர்டரில் மூன்றாம் இடத்தில் அக்சர் படேல் களம் கண்டு, 21 பந்துகளில் 21 ரன்கள் எடுத்தார். 5ம் இடத்தில் விளையாடிய திலக் வர்மா 34 பந்துகளில் 62 ரன்கள் எடுத்தார்.

இந்த சூழலில் செய்தியாளர் சந்திப்பில் திலக் வர்மா, "அணியில் உள்ள எல்லோரும் பேட்டிங் ஆர்டரில் எந்த இடத்திலும் விளையாட தயாராக உள்ளோம். அணி நிர்வாகத்தின் விருப்பத்துக்கு ஏற்ப மூன்று, நான்கு அல்லது ஐந்தாம் இடத்தில் விளையாட நான் தயாராக உள்ளேன். மனதளவில் திடமாக இருந்தால் எந்த இடத்திலும் பேட் செய்ய களம் கண்டு சிறப்பாக விளையாட முடியும்.

கடந்த 2024 உலகக் கோப்பை தொடரில் டாப் ஆர்டரில் அக்சர் படேல் தனது ரோலை சிறப்பாக செய்திருந்தார். சில நாட்களில் நமது திட்டங்கள் நடைபெறாமல் போகலாம்" என்றார்.



# தோல்வியுடன் விடைபெற்றார் பிரபல WWE வீரர் ஜான் சீனா

பிரபல WWE மல்யுத்த வீரரும் நடிகருமான ஜான் சீனா, தன்னுடைய கடைசி போட்டியில் தோல்வியடைந்த நிலையில் ஓய்வு பெற்றார். கடந்த ஆண்டே தனது கடைசி போட்டி குறித்த அறிவிப்பை அவர் தெரிவித்திருந்தார்.

90ஸ் கிட்ஸ்களின் மறக்க முடியாத நினைவுகளில் WWE நிகழ்ச்சிக்கு எப்போதும் தனி இடம் உண்டு. இந்த சண்டைப் போட்டியில் பல 'சூப்பர் ஸ்டார்கள்' வருகை தந்து, வென்று காட்டி, விடைபெற்றுள்ளனர். இதில் ஜான் சீனாவுக்கு என தனி ரசிகர் பட்டாளம் உண்டு. அதற்கு காரணம் அவருடைய தனித்துவமான சண்டைப் பாணி. அதன் மூலம் உலக அளவில் ரசிகர்களை அவர் கவர்ந்தார். ரிங்குங்கள் சண்டைக்காக அவர் என்ட்ரி கொடுக்கும் அந்த தருணத்தில் ஒலிக்கும் பின்னணி இசை பலரது போனில் ரிங்டோனாக ஒலித்தது உண்டு.

கடந்த 2002ம் ஆண்டு WWEல் அறிமுகமான ஜான் சீனா, WWE ஜாம்பவான்களான தி ராக், ட்ரிபிள் ஹெச், ரேண்டி ஆர்ட்டன், தி அண்டர்டேக்கர் உள்ளிட்டொருடன் மோதியுள்ளார். 14 முறை WWE சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார். இந்நிலையில், தனது கடைசி போட்டியில் அவர் தோல்வியுடன் விடைபெற்றார்.

மல்யுத்தம் தவிர 'தி சூசைட் ஸ்குவாட்', 'ஃப்ரீலான்ஸ் உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களிலும், டிசி காமிக்ஸின் பிரபலமான 'பீஸ்மேக்கர்' வெப் தொடரில் பிரதான கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார்.

# 3 இந்தி படங்களில் நடிக்கும் ஸ்ரீலீலா



தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கும் ஸ்ரீலீலா, 'புஷ்பா 2' படத்தில் ஒரு பாடலுக்கு ஆடியிருந்தார். இந்தப் பாடல் மூலம் அவருக்கு இந்தி வாய்ப்புகள் கிடைத்து வருகின்றன.

பாலிவுட்டின் இளம் ஹீரோ கார்த்திக் ஆர்யனுடன் அவர் நடித்துள்ள 'து மேரி ஜிந்தகி ஹே' இன்னும் வெளியாகவில்லை. அதற்குள் அவருக்கு மேலும் சில வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

அடுத்து இப்ராஹிம் அலிகான் ஜோடியாக, அவர் ஒரு படத்தில் நடிக்க இருக்கிறார். 'டிலர்' என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தின் ஷூட்டிங் விரைவில் தொடங்க இருக்கிறது. இதற்கிடையே 'சூமந்தர்' என்ற பாலிவுட் படத்திலும் அவர் ஒப்பந்தமாகி இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தியில் நடித்துள்ள முதல் படம் வெளிவரும் முன்பே அவர் மேலும் 2 படங்களில் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

சிவகார்த்திகேயனின் 'பராசக்தி' படம் மூலம் தமிழில் அறிமுகமாக இருக்கிறார். இதற்கிடையே மலேசியா சென்றுள்ள ஸ்ரீலீலா, அங்கு நடிகர் அஜித் குமாரை சந்தித்துள்ள புகைப்படங்கள் இணையத்தில் பரவி வருகின்றன.

# க்ரைம் த்ரில்லராக உருவான 'தூள் பேட்டை போலீஸ் ஸ்டேஷன்'

அஸ்வின் குமார் நாயகனாக நடித்துள்ள வெப் தொடர் 'தூள் பேட்டை போலீஸ் ஸ்டேஷன்'. இது ஆஹா ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ளது. இதை ஜெஸ்வினி எழுதி, இயக்கியுள்ளார். குரு லட்சுமணன், பாடினி குமார், ஸ்ரீத்து கிருஷ்ணன், பிரீத்தி ஷர்மா, சவுந்தர்யா, ஷியமந்தா கிரண், ரவிவர்மா, பிர்லா போஸ், விஸ்வாமித்ரன், சுரேந்தர் விஜே, ரஞ்சனா என பலர் நடித்துள்ளனர்.

பேரபிள் பிக்சர்ஸ் சார்பில் தேவன் சார்லஸ், பிரவீன் குமார், சரண்யா வீரமணி ஆகியோர் தயாரித்துள்ளனர். இந்த க்ரைம் த்ரில்லர் தொடருக்கு என்.எஸ்.சதீஷ்குமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். அஷ்வத் இசையமைத்துள்ளார்.

"தூள் பேட்டை பகுதியில் துணை ஆணையராகப் பொறுப்பேற்கும் அஷ்வின் குமார், அங்கு நடக்கும் 3 கொலைகள் பற்றிய விசாரணையை தொடங்குகிறார். முதல் இரு எபிசோடுகளில் க்ரைம் த்ரில்லர் அம்சங்களுக்கு துளியும் குறைவின்றி ஏராளமான கேள்விகளை எழுப்பும் திரைக்கதை, ரசிகர்களுக்கு சுவாரஸ்யத்தை ஏற்படுத்தும்" என்கிறார் இயக்குநர்.



# 'கொம்புசீவி'யில் உண்மை சம்பவக் கதை: இயக்குநர் பொன்ராம் தகவல்




சண்முக பாண்டியன் ஹீரோவாக நடிக்கும் 'கொம்பு சீவி' படத்தை பொன் ராம் இயக்கி இருக்கிறார். இதில் சரத்குமார் முக்கிய கேரக்டரிலும் புதுமுகம் தார்னிகா நாயகியாகவும் நடிக்கின்றனர்.

மேலும் சுஜித் ஷங்கர், கல்கி, முனீஷ்காந்த், காளி வெங்கட், ஜார்ஜ் மரியான் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ஸ்டார் சினிமாஸ் முகேஷ் டி.செல்லையா தயாரித்துள்ள இப்படம் டிச.19ம் தேதி வெளியாகிறது.

இந்நிலையில் படம் பற்றி இயக்குநர் பொன்ராம் கூறும்போது, "1996ம் காலகட்டத்தில், தேனி மாவட்டத்தில் நடந்த உண்மைச் சம்பவக் கதையை மையப்படுத்தி, சில மாற்றங்களுடன் இப்படத்தை உருவாக்கி இருக்கிறோம். வைகை அணை கட்டும்போது 12 கிராமங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. மக்கள் இடம் பெயர்ந்தாலும் அம்மக்களின் வாழ்வாதாரம் அந்தப் பகுதியைச் சுற்றிதான் இருக்கும். அணையில் தண்ணீர் வற்றினால் அவர்கள் வைத்த கிணறு, வீடு ஆகியவை அடையாளங்களாகத் தெரியும்.

நான் 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' படப்பிடிப்புக்காக அந்தப் பகுதிக்குச் சென்றபோது அணைக்குள் ஒரு கிணறு இருந்தது. அதில் மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். தண்ணீர் வந்து அணை நிரம்பினால், அதை விட்டுவிடுவார்கள். இதன் பின்னணியில் அமைக்கப்பட்ட கதைதான் இந்தப் படம்.

ஒரு விஷயத்தைத் தூண்டி விடுவதற்கு கொம்புசீவி விடுவது என்று கிராமங்களில் சொல்வது உண்டு. அதனடிப்படையில் வைக்கப்பட்ட தலைப்புதான் இது. இதில் சரத்குமார், சண்முக பாண்டியன் இருவருமே சிறப்பாக நடித்துள்ளனர். வழக்கமாக என் படங்களில் இருப்பது போல ஆக்ஷன், காமெடிக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கி இருக்கிறோம். இதில் நாயகியாக நடித்துள்ள தார்னிகா, முன்னாள் ஹீரோயின் ராணியின் மகள். அவர் போலீஸாக நடித்துள்ளார்" என்றார்.

# தமிழக வெற்றிக் கழகத்தின் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைமை அலுவலகத்தை திறந்து வைத்தார் தவெக பொதுசெயலாளர் புஸ்ஸி ஆனந்த்

மேளதாளங்கள் முழங்க வழி நெடுகிலும் உற்சாக வரவேற்பு அளித்த தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள்





திரிசூலம், டிச.15-

சென்னை அடுத்த திரிசூலத்தில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைமை அலுவலக திறப்பு விழா நிகழ்ச்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல் வி.குமார் தலைமையில் மாவட துனை செயலாளர் சுனிதா ரமேஷ் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கி சிறப்பு அழைப்பாளராக கழக பொதுசெயலாளர் ஆனந்த் ணிஙீ விலிகி கலந்து கொண்டு தலைமை அலுவலகத்தை திறந்து வைத்து பார்வையிட்டு மாவட்ட செயலாளர் மின்னல்குமார், துனை செயலாளர் சுனிதா ரமேஷ் மற்றும் அனைத்து கழக நிர்வாகிகளுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டர்.

அதனைத் தொடர்ந்து பரங்கிமலை ஒன்றியம் திரிசூலம் பகுதி தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் கபடி விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகையாக 20 ஆயிரம் ரூபாயும், தீ விபத்தி னால் வீடு இழந்து தவித்து வந்த குடும்பத்திற்கு ஒரு லட்ச ரூபாயும் நலத்திட்ட உதவியாக செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் பரங்கிமலை ஒன்றியம் தலைமை சங்கர் முன்னிலையில் வழங்கினர்.

இதில் செங்கல்பட்டு வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட பல்லாவரம், அஸ்தி னாபுரம், பம்மல், பொழிச்சலூர், அனகாபுத்தூர், பரங்கிமலை ஒன்றியம் பகுதி செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள், மகளிர் அணியினர், உட்பட ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அறுசுவை உணவு மாவட்ட கழகத்தின் சார்பில் வழங்கப்பட்டது.

# பல்லாவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் மாபெரும் கால்பந்தாட்ட போட்டி





பல்லாவரம், டிச.15-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பாக கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கால்பந்தாட்ட போட்டி பகுதி இளைஞரணி அமைப்பாளர் சரத் வெங்கடேசன் தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் வரவேற்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் தா.மோ. அன்பரசன், மாவட்டத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளை துவக்கி வைத்து கோப்பைகளை அறிமுகம் செய்து வைத்தனர் அப்பொழுது பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னார்ட், பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், தென்காசி மாவட்ட இளைஞர் அணி டி.ஆர்.கிருஷ்ணராஜா, மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்ய பிரபு, ச.சிவக்குமார், இரா.சேகர், எஸ்.நெடுஞ்செழியன், பி.அம்பிகா, டி.வி.ராஜா, டி.எச்.பிரான்சிஸ் பால் வி.என்.சிலம்பரசன் தே.இளங்கோவன் பி.ராஜ்குமார், எஸ்.முஜிபுர் ரகுமான், காமேஷ், ரங்கநாதன், கோ.ரங்கநாதன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள்

# "தவறான ஆட்சிக்கு அதனைத் தேர்ந்தெடுத்த மக்களே பொறுப்பு" சீமான்

மதுரை, டிச.15-

தமிழகத்தில் நடக்கும் தவறான ஆட்சிக்கு ஆட்சியாளரை தேர்ந்தெடுத்த மக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும் என, மதுரையில் சீமான் கூறினார்.

சென்னையில் இருந்து ஈரோடு செல்ல விமானம் மூலம் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் மதுரை வந்தார். அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக அரசு ஊழியர்கள் பழைய ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தற்போது போராட்டம் நடத்துகின்றனர்.

இக்கோரிக்கைகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன. அவர்கள் கேட்பது நியாயமான கோரிக்கைகள் தான். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, இது போன்ற போராட்டத்தில் மு.க.ஸ்டாலின் பங்கேற்றிருக்கிறார். நான் அரசு ஊழியர்கள் போராட்டத்துக்கு ஆதரவளித்து பங்கேற்கிறேன். ஓய்வூதியத்துக்குப் பயந்து பணி நிரந்தரம் செய்யாமல் ஆசிரியர்களை ஒப்பந்தம், பகுதி நேர பணியில் வைத்துள்ளனர்.

அரசு நிர்வாகத்தை முறையாக செயல்படுத்தவில்லை. ஓய்வு பெறும் வயது 58ல் இருந்து 60 ஆக அதிகரித்தது ஏன். ஓய்வு பெற்றவுடன் ஓய்வூதியம் கொடுக்க உங்களிடம் நிதியில்லை. இது போன்ற சூழலில் படித்த இளைஞர்கள் அரசு வேலைக்கு போக முடியவில்லை. அரசுப் பணியென எதுவுமின்றி எல்லாவற்றையும் தனியார் முதலாளிகளிடம் ஒப்பந்தம் கொடுத்துள்ளனர். தூய்மைப் பணிகளும் தனியார் முதலாளிகளிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் அவர்களுக்கு சம்பளம் கொடுப்பது அரசு தான். தனியார் முதலாளிகள் லாபமின்றி எதையும் செய்வதில்லை. தமிழகத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள ஆந்திரா முதலாளிகளுக்கு என்ன ஆசையா?

தமிழக போக்குவரத்து தொழிலாளர்களிடம் பிடித்த தொகை ரூ.7500 கோடி என்ன ஆனது. இதைக் கேட்டு எத்தனை முறை போராடினார்கள். எதிர்க்கட்சியாக இருக்கும் போது, நாங்கள் வந்தவுடன் நிறைவேற்றுவோம் எனச் சொல்கிறீர்கள். ஆளுங்கட்சியாக வந்தபிறகு தூக்கி தூரப் போடுகிறீர்கள். தவறான ஆட்சி நடக்குது என்றால் அதற்கு ஆட்சியாளர் பொறுப்பல்ல. ஆட்சியாளரை தேர்ந்தெடுத்த மக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும்.

கேரள மாநில உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸூம், கம்யூனிஸ்ட்டும் அதிக இடங்களை வென்று இருந்தாலும், நம்ம ஊர் அரசியலைப் பேசவேண்டும். இவ்வாறு சீமான் கூறினார்.

அதிமுகவில் அதிருப்தியில் இருக்கும் முக்கியத் தலைவர்களை தவெக பக்கம் கொண்டு வந்து, அக்கட்சியை வலுப்படுத்துவேன் என, செங்கோட்டையன் கூறுவது குறித்து செய்தி யாளர்கள் எழுப்பிய கேள்விக்கு சீமான் பதிலளி க்காமல் சிரித்துக்கொண்டே "கல்யாணத்துக்கு செல்கிறேன்" எனக் கடந்துவிட்டார்.





# சேம்பர் நடுநிலைப் பள்ளியில் புதிய பாரத எழுத்தறிவு திட்டம் தேர்வு

காளையார் கோவில், டிச.15-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பள்ளிக்கல் வித்துறை, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் சார்பில் புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தின் மூலம் அடிப்படை எழுத்தறிவு தேர்வு நடைபெற்றது. தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட ங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்ற புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் கடந்த ஜூலை 2025 முதல் பயின்று வரும் அனைத்து கற்போருக்கும் இறுதி அடிப்படை எழுத்தறிவு தேர்வு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சேம்பரில் நடைபெற்றது. கற்போர்க்கு வசதியாக தேர்வு மையம் அமைக்கப்பட்டிருந்தது. கற்போர் மாற்றுத் திறனாளியாகவோ வயதில் மூத்த கற்போராக இருப்பின் அவருடைய இல்லங்களில் இந்த அடிப்படைத் தேர்வு எழுத அனுமதி வழங்கப்பட்டது. அனைத்து கற்போரும் 100% தேர்வில் கலந்து கொண்டனர். பாரத எழுத்தறிவு திட்ட தேர்வு மையத்தை காளையார் கோவில் வட்டார கல்வி அலுவலர் பொன்னி அவர்கள் பார்வையிட்டார். தேர்வு எழுதுவதற்கான இருக்கை வசதிகள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மின்சார வசதி, போதிய வெளிச்சம் மற்றும் காற்றோட்ட வசதி, வயதில் மூத்த மற்றும் மாற்றுத்திறனாளி கற்போருக்கு வசதியாக சாய்தளம் நடைபாதை போன்ற வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேர்வு முதன்மை கண்காணிப்பாளராக பள்ளியின் தலைமை ஆசிரியர் சுரேஷ் அரை கண்காணிப்பாளராக தன்னார்வலர் நாயக மலர் ஆகியோர் செயல்பட்டனர். தேர்வு முடிந்ததும் தேர்வு எழுதிய வினா விடைத்தாள்களை, பதிவு எண் வாரியாக பாதுகாப்பாக கட்டி உரையில் வைத்து அந்த உரையின் மேல் மையத்தின் முகவரி உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய முகப்புத் தாளை ஒட்டி தலைமையாசிரியர் மற்றும் தன்னார்வலர் கையப்பத்துடன் வட்டார வளமையத்தில் ஒப்படைக்கப்பட்டது. புதிய பாரத எழுத்தறிவித்திட்ட அடிப்படை எழுத்தறிவு தேர்வு, அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் சுரேஷ் ஏற்பாடு செய்திருந்தார்.






# திருவஞ்சேரி ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டம்

தாம்பரம், டிச.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதி புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் திருவஞ்சேரி ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள், தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி.இளம்சுருதி ஆகியோர் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்கள் இக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி, திருவஞ்சேரி ஊராட்சி மன்ற தலைவர் ஜனனி சுரேஷ்பாபு, துணைத் தலைவர் ருக்மணி சக்தி, ஒன்றிய கழக அவைத் தலைவர் எம்.சக்தி, கிளைக் கழக செயலாளர்கள் மகிமனோகரன், எஸ்.நாகலிங்கம், டி.வி.ஜே.சுரேஷ் பாபு, பாக முகவர்கள் வெங்கடேசன், பொன்னுவேல், என்.கோபி, எஸ்.பார்த்திபன், சூர்யா பொண்ணுவேல் மற்றும் ஒன்றிய கழக அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிகள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்புத்தனர்.

# மானாமதுரையில் கையில் அள்ள அள்ள வந்த தார் சாலை - தரமற்ற பணியால் பொதுமக்கள் அவதி





மானாமதுரை, டிச.15-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் 1 முதல் 27 வார்டுகளிலும் பல்வேறு பணிகளுக்காக சாலைகள் உடைக்கப்பட்டு அதனை சீர் செய்யும் நோக்கில் மானாமதுரை நகராட்சி நிர்வாகம் சார்பில் சாலையை சீரமைக்கும் பணி நடைபெற்றது இதில் சமீபத்தில் போடப்பட்ட தார் சாலை, கையில் அள்ளினாலே உரிந்து வரும் அளவுக்கு தரமற்ற நிலையில் இருப்பது பொதுமக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தார் முறையாக காயாமல், மென்மையாக இருப்பதால் சாலை முழுவதும் ஒட்டும் நிலையில் காணப்படுகிறது.

இதனால் இருசக்கர வாகன ஓட்டிகள் சறுக்கி விழும் அபாயம் அதிகரித்துள்ளது. பாதசாரிகள் நடக்க முடியாத சூழலும் உருவாகியுள்ளது. வெயிலின் தாக்கம் காரணமாக தார் உருகி, சில இடங்களில் சாலை முற்றிலும் சேதமடைந்துள்ளதாக கூறப்ப டுகிறது.

சாலை அமைப்பில் தரமற்ற பிட்டு மென் பயன்ப டுத்தப்பட் டதோடு, அடிப் படை பணிகள் முறையாக செய்யப் படவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட் டுகின்றனர். கோடிக்கணக்கான ரூபாய் செலவில் அமைக்கப்படும் சாலைகள் குறுகிய காலத்திலேயே இவ்வாறு சேதமடைவது வரி செலுத்தும் மக்களுக்கு அநியாயம் என அவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

உடனடி நடவடிக்கை கோரிக்கை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து, தரமற்ற தார் சாலையை அகற்றி விதிமுறைப்படி புதிய சாலை அமைக்க வேண்டும். மேலும், தவறிழைத்த ஒப்பந்ததாரர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

# "அண்ணா, எம்ஜிஆர்போல் விஜய்யும் அதிசயமானவர்" - தவெக அருண்ராஜ் பேச்சு



திருச்செங்கோடு, டிச.15-

"புகழ் பெற்றவர்கள் கொள்கை பேசுவது கிடையாது. கொள்கை பேசுபவர்கள் புகழ் பெற்றவர்கள் கிடையாது. அண்ணா, எம்ஜிஆர் போல் விஜய்யும் அதிசயமானவர்" என தவெக கொள்கை பரப்புச் செயலாளர் அருண்ராஜ் பேசினார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் தவெக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளர் அருண்ராஜ் பங்கேற்றுப் பேசியதாவது: முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தவெகவில் இணைந்தவுடன் அவரின் வயதை மற்றவர்களுடன் ஒப்பிட்டு விமர்சனம் செய்தனர். ஆனால் அவர் தவெகவில் இணைந்தவுடன் அவருக்கு 20 வயது குறைந்துவிட்டது. இதுபோன்ற இளைஞர் பட்டாளம் கூட யார் இருந்தாலும் 10, 15 வயது குறைந்துவிடும்.

நான் கடந்த 1997 ம் ஆண்டு 12ம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் 2ம் இடம் பிடித்தபோது பெருமைப்பட்டேன். 2வது முறையாக யுபிஎஸ்சியில் ஐஆர்எஸ் அதிகாரியாக தேர்வானபோதும் பெருமைப்பட்டேன். ஆனால் அதைவிட பெருமை தவெகவில் உறுப்பினராக இணைந்தது தான்.

தவெக ஆரம்பிக்கப்பட்டபோது பாரம்பரியம் மிக்க இரு கட்சிகளை தாண்டி யாரும் வர முடியாது எனக் கூறினார். ஆனால், கட்சி தொடங்கி 2 ஆண்டுகளுக்குள்ளே தமிழகத்தின் முதன்மைக் கட்சியாக தவெக மாறியுள்ளது. தவெக ஆட்சி அமையும்போது அது உலகின் 8வது அதியசமாக விளங்கும். தவெக தலைவர் விஜய்யை குடும்ப உறுப்பினர்களாக மக்கள் பார்க்கின்றனர். என் அண்ணன், தம்பி, என் மாமா எனப் பார்க்கின்றனர். மற்ற நடிகர்களைக் காட்டிலும் விஜய்யை மட்டும் தான் குடும்ப உறுப்பினராக பார்ப்பதாக பலர் தெரிவிக்கின்றனர். அண்ணா, எம்ஜிஆர் போல் தலைவர் விஜய்யும் அதிசயமானவர்.

நான் எங்கு போனாலும் நானும் தவெக உறுப்பினர் என கூறுகின்றனர். இது அன்பால் சேர்ந்த கூட்டம். இதை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. தலைவர் விஜய் அரசியல் கட்சி தொடங்கியபோது சமூக நீதியை தூக்கிப் பிடித்தார். பெரியார், காமராஜர் ஆகியோரை உயர்த்திப்பிடித்தார். அப்போது நெஞ்சில் கை வைத்தவர்கள் இன்னும் வைத்துக் கொண்டுள்ளனர்.

புகழ் பெற்றவர்கள் கொள்கை பேசுவது கிடையாது. கொள்கை பேசுபவர்கள் புகழ் பெற்றவர்கள் கிடையாது. கொள்கை பற்று இருந்தால் மட்டும் தான் நாம் நீண்ட காலத்துக்கு பயணிக்க முடியும். நம் எதிரி திமுக. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என உழைக்கிறோம்.

ஒரு சாதாரண தொண்டனுக்கும் தவெக தலைவர் விஜய் பதவி கொடுத்து அழகு பார்க்கிறார். தமிழகத்தில் அனைத்து துறைகளிலும் ஊழல் நிறைந்துள்ளது. தமிழகத்தில் நேரு என்ற அமைச்சர் ஒருவர் உள்ளார். ஆனால், அவர் பெயருக்கு நேர்மாறாக உள்ளார்.

அவர் துறையில் நடந்த ஊழல் தொடர்பாக விரிவாக அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழக காவல் துறையினர் வழக்கு பதியாமல் தூங்கிக் கொண்டுள்ளது. குடும்ப ஆட்சி, ஊழல் ஆட்சி என்பது மட்டும் கிடையாது.

பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத அரசாகவும் திமுக அரசு உள்ளது. சட்டம் ஒழுங்கு தமிழகத்தில் சுத்தமாக கிடையாது. அதை சரி செய்ய முடியாத நிலையில் முதல்வர் உள்ளார். முதல்வருக்கு சினிமா பார்க்கவே நேரம் சரியாக உள்ளது.

ஆனால், காவல் துறையினர் ஒரு வேலையை சரியாக செய்கின்றனர். அது என்னவெனில் தவெக கூட்டம் நடக்கும் இடங்களில் காவல் துறையினர் 108 நிபந்தனைகள் விதிக்கும் வேலை தான்.

ஊடக சுதந்திரம் தமிழகத்தில் கிடையாது. பேச்சு சுதந்திரமும் கிடையாது. திமுகவுக்கும், பாஜகவுக்கும் என்ன வித்தியாசம் உள்ளது. திமுக பாசிச கட்சி தான். ஈரோட்டில் தவெக கூட்டத்துக்கு 88 நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது. நீங்கள் எவ்வளவு நிபந்தனைகள் விதித் தாலும் தவெக வெற்றியை தடுக்கவே இயலாது.

சேலத்தில் நான் பிறந்திருந்தாலும் திருச்செங்கோடு தான் எனது சொந்த ஊர். திருச்செங்கோடு அருகே உள்ள கோட்டப்பாளையம் சொந்த கிராமம். எனது வாழ்க்கையின் ஒவ்வொரு தருணங்களிலும் திருச்செங்கோடு வந்து சென்றுள்ளேன். திருச்செங்கோடு 2009ம் ஆண்டு முதல் அப்படியே உள்ளது. பெரிய மாற்றம் இல்லை. தொழில் திறன் வாய்ந்த தொகுதியில் அரசு பெரியளவில் வளர்ச்சி செய்யவில்லை. திருச்செங்கோட்டில் நிறைய பிரச்சினை உள்ளது. சுற்றுச்சாலை திட்டப்பணி முடியாமல் உள்ளது. திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயிலுக்கு அடிப்படை வசதிகள் செய்யப்படாமல் உள்ளது. 4 ஆண்டு முடிவில் ரோப்கார் வசதி செய்வதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கூறுகிறார். தமிழகத்தில் 234 தொகுதியிலும் தவெக வெற்றி பெற்று ஆட்சியமைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161